(ஈ) உரிமைக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்வு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991–92 ஆம் ஆண்டிற்கான உரிமைக் குழுவிற்கு (Committee on Privileges) பேரவையின் பதினான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க் கண்ட பதினான்கு உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்புத் தாள்கள் வரப்பெற்றுள்ளன:—

1. திரு. சி. ஞானசேகரன்
2. திரு. ச. புரட்சிமணி
3. திரு. மு. வெங்கடராம ரெட்டி
4. திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன்
5. திரு. என். ஆர். இராஜேந்திரன்
6. திரு. சி. மாணிக்கம்
7. திரு. கே. குப்பன்
8. திரு. சி. இராமசுவாமி
9. திரு. கே. பி. ராஜு
10. திரு. எஸ். அன்பழகன்
11. திரு. ஜெ. பாலகங்காதரன்
12. திரு. எம். பூராசாமி
13. திரு. ஆர். கோடி மாரி
14. திரு. ஆர். பி. பரமசிவம்

எனவே, 1991–92 ஆம் ஆண்டிற்கான உரிமைக் குழுவிற்கு இவர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றதாக நான் அறிவிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவை முன்னவர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் பேரவைத் துணைத் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவை விதிகளின் 227 (3)—வது விதியின் கீழ் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இக்குழுவின் தலைவராக இருப்பார்.

5. அரசினர் தீர்மானம்.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாது ஒத்திவைக்கப் பெறுதல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"பேரவை விதி 25 (1)– இன்படி பேரவை மீண்டும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெற வேண்டும்".